

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், கோவூர் தனியார் மஹாலில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கழகப் பொருளாளரும், கழக மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.




அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக மயிலாடுதுறை மாவட்டத்திற்கு நேற்று (15.7.2025) வருகை தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு சாலையின் இருபுறங்களிலும் பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை முதல்வர் பெற்றுக் கொண்டார்.

### ‘உங்களுடன் ஸ்டாலின்’ – கழக அரசின் புரட்சிகரத் திட்டத்தின் மூலம்

# கடலூர் மாவட்டப் பொதுமக்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்!

**கடலூர், ஜுலை 16-**

**கடலூர் மாவட்ட பொதுமக்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.**

அதன் விவரம் வருமாறு:-

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (14.7.2025) இரயில் மார்க்கமாக சிதம்பரம் வந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (15.7.2025) காலை சிதம்பரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 123வது பிறந்தநாளையொட்டி, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர், சிதம்பரத்தில், “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்திற்கான முகாமினை தொடங்கி வைத்து, சிதம்பரம் வட்டம், லால்புரத்தில் கட்டப்பட்டுள்ள ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை திறந்து வைத்தார்.

இந்தப் பயணத்தின்போது கடலூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அவற்றை உடனடியாக நிறைவேற்றி கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.

**1. நடராஜர் கோவில், அண்ணாமலை பல்கலைக்கழகம் போன்ற பல சிறப்பு களை பெற்றுள்ள சிதம்பரம் நகரத்தில், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், தில்லை அம்மன் ஓடை மற்றும் கான் சாகிப் கால்வாய் ஆகியவற்றை ஒட்டி, புதிய இணைப்புச் சாலை ஒன்று 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**



**2. வட மாவட்டங்களில் உள்ள அனைத்து பழங்குடியினரும் பயன்பெறும் வகையில், கடலூர் வட்டத்தில் உள்ள அரிசிபெரியான்குப்பத்தில், புதிய உண்டு உறைவிட பழங்குடியினர் பள்ளி ஒன்று தொடங்கப்படும்.**

**3. காட்டுமன்னார்கோயில் வட்டத்திலிருந்து புதிதாக பிரிக்கப்பட்டுள்ள ஸ்ரீமுஷ்ணம் வட்டத்திற்கும், காவிரி டெல்டா பகுதிக்காக செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களின் பயன்கள் கிடைக்கும் வகையில், ஸ்ரீமுஷ்ணம் வட்டம் காவிரி டெல்டா பகுதியாக அறிவிக்கப்படும்.**

**4. வீராணம் ஏரிப் பகுதியில் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், சோழதரத்தில் இருந்து இராஜமதகு வரை படகுச்சவாரி மேற்கொள்ளவும், சுற்றுலா பயணிகளுக்கான வசதிகளை அமைத்திடவும், 10 கோடி ரூபாய் செலவில் ஏரி தூர் வாரும் பணிகளும் சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் மேற்கொள்ளப்படும்.**

**5. சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன் கோரிக்கையை ஏற்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் திறனை மேம்படுத்தி, அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், கூடுவெளி சாவடியில் புதிய திறன் மேம்பாட்டு நிலையமும் தொழிற்பேட்டையும் அமைக்கப்படும்.**

மேலும், நேற்று காலை ஐயா எல். இளையபெருமாள் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கம் திறப்பு விழாவில், கடலூர், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி பகுதிகளில் வாழும் மகளிருக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும் வகையில், குறிஞ்சிப்பாடி அருகில் இருக்கும் கொடுக்கன்பாளையத்தில், 150 ஏக்கர் பரப்பளவில், தோல் அல்லாத காலணி மற்றும் காலணிகளுக்கான உதிரிபாகங்கள் உற்பத்திக்கான பெரும் தொழில் பூங்கா 75 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்களால் அறிவிப்புவெளியிடப்பட்டதுகுறிப்பிடத்தக்கது.

### முதல்வர் காணொலி வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து

## திருத்தணியில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடத்தில் மருத்துவ சேவை!

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*திருத்தணி, ஜுலை.16:*

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணியில் ரூ. 45 கோடி மதிப்பீட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு அதி நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை ஏப்ரல் மாதம் 18ம் தேதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார். இதை அடுத்து புதிய கட்டிடத்தில் மின்சாரம் குடிநீர் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் அமைக்கும் பணி நடைபெற்று நிறைவடைந்தது. இதையடுத்து புதிய கட்டிடத்தில் மருத்துவ சேவை தொடக்க விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி புதிய கட்டிடத்தில் மருத்துவ சேவைகளை தொடங்கி வைத்தார்.

இதை அடுத்து மருத்துவமனையில் சிகிச்சை பெற வந்த நோயாளிகளை திருத்தணி எஸ் சந்திரன் எம்எல்ஏ மாவட்ட சுகாதார பணிகள் இணை இயக்குனர் டாக்டர் அம்பிகா மற்றும் மருத்துவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அதி நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 4 மாடி மாவட்ட அரசு மருத்துவமனை புதிய கட்டிடத்தில் அனைத்து வகையான ஆசிரியர்களும் செய்யப்பட்டுள்ளதாகவும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் முழுமையாக நிரப்ப குடும்ப நல்வாழ்வுத்துறை அமைச்சரை சந்தித்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களை நிரப்ப கோரிக்கை விடுக்க உள்ளதாக தெரிவித்தார்.

.உடன் நகர கழகச் செயலாளர் வி. வினோத் குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தேவன், உதவி செயற்பொறியாளர் முரளி, தலைமை மருத்துவ அலுவலர் விஜய் ஆனந்த், மருத்துவ அலுவலர் அம்பிகா சண்முகம் நிர்வாகிகள் ஜி. எஸ்.கணேசன், கே.எஸ். அசோக்குமார், டி.எஸ். ஷியாம் சுந்தர், குமரன், ரேணுகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் மப்பேடு மற்றும் முதுகூர் ஊராட்சிகளில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துரைத்து ஓர் அணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் கழக உறுப்பினர்களை சேர்த்திடும் பணியில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் பங்கேற்றார். இந்நிகழ்வில் மேற்கு ஒன்றிய செயலாளர் மோ. இரமேஷ், ஒன்றிய நிர்வாகிகள் உளுந்தை ஆர். கோபால், நீலாவதி ராஜேந்திரன், கீதா முனுசாமி, சண்முகம், தயாளன் சரவணன் முதுகூர் பிரபாகர், விநாயகம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆர். மனோஜ்குமார், மகளிர் அணியினர் காயத்ரி குமரேசன், சூர்யா, மஞ்சுவரதன், மதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### சோ.பா.மலர்வண்ணன் தலைமையில்

## திருக்குவளையில் கலைஞர் பிறந்த நாள் விழா தெருமுனைக் கூட்டம்!

### என்.இளையராஜா, ஆரூர்.மணிவண்ணன், இரா.ப்ரீத்தி சிறப்புரை!

*நாகை, ஜுலை 16*

நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெரு முனை பிரச்சார கூட்டம் திருக்குவளை கடைத் தெருவில் நடைபெற்றது.

தெரு முனை பிரச்சார கூட்டத்திற்கு கீழையூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன் தலைமை தாங்கினார். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் இரா.கார்த்தி வரவேற்றார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி, துணை அமைப்பாளர்கள் எஸ்.டேனியல்சத்தியா, பன்னீர்செல்வம், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பி.தேவராஜான், வி.குமரேசன், எஸ். சக்கரவர்த்தி, எம்.ஸ்டாலின், ஜெ.அருண்குமார், என்.விக்னேஷ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், தாட்கோ தலைவர் என்.இளையராஜா, நாகை மாவட்டக் கழக துணைச் செயலாளரும், தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரூர். மணிவண்ணன், இளம் பேச்சாளர் இரா.ப்ரீத்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் ஆர்.ஜி.தமிழரசின், ஒன்றிய நிர்வாகிகள் வை. சண்முகசுந்தரம், எஸ். கே.பார்த்திபன், கே.சுரேஷ், வி.எஸ்.குமார், பி. நிர்மல்ராஜ், எஸ்.வடுகநாதன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் வி.எம்.கே.பாலாஜி, குவளை சோ.கணேசன், பொன்.சண்முகநாதன்,

இ. ஜோதிபாசு, பி.தியாகராஜன், வீரராகவன், எம்.செந்தில்குமார் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.குமார் நன்றி கூறினார்.



சென்னை அண்ணாசாலை, பல்லவன் இல்லம் அருகில் நேற்று (15.07.2025) தமிழ்நாடு அரசின் சார்பில் கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்படும் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 123வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்டை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் எர்ணாவூர் நாராயணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.